Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# சோழர்கால கல்வெட்டுகள் கூறும் வரலாற்றுச் செய்திகள்

**முனைவர் சி.ரேணுகாதேவி**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்.
renukadevinrsm@gmail.com

பழங்காலத்தில் சில செய்திகள் என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள். அதனால் பின்பு பல பொருள்கள் மீது அவற்றை நிலையாக எழுதி வைத்தார்கள் அவற்றில் கல்லும் ஒன்று, மற்றொன்று உலோகம். முதலில் கல்லின் மீது எழுத வேண்டிய செய்தியை ஓவியம்போல் வரைவார்கள். பின்பு அதன்மீது கூர்மையான உளி போன்ற கருவியால் வெட்டுவார்கள். வெட்டிய எழுத்துகள் கல்லில் சிறிது பள்ளமாகத் தோன்றும். கல்லில் வெட்டப்பட்டிருந்தால் அவைகல்வெட்டுகள் எனப்படும்.

**கல்வெட்டின் மூலம்:**

கல்வெட்டுச் செய்திகள் முதலில் ஓலையில் எழுதப்பட்டன. பின்னர் அவை கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டன. சில செப்பேடாகவும் எழுதப்பட்டன. பல கல்வெட்டுகளில் இந்த ஓலையை ஆதாரமாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் எழுதிக் கொள்ளலாம் என்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

**கிடைக்கும் இடங்கள்:**

பழங்காலக் கல்வெட்டுகள் தமிழக மலைக் குகைகளிலும், சங்ககால நடுகற்களிலும், தொல்லியல் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளிலும் கிடைக்கின்றன. முத்திரைகளிலும், மோதிரங்களிலும், பழமையான காசுகளிலும் கல்வெட்டுகளை ஒத்த எழுத்துப் பொறிப்புகள் உள்ளன.

**படி எடுப்போர்**

மைய அரசின் தொல்லியல் அளவீட்டுதுறையின் கல்வெட்டுப் பிரிவினர், தமிழகத் தொல்லியல் துறையினர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல்லியல், கல்வெட்டுத்துறையினர் ஆகியோர் கல்வெட்டுகளைப் படி எடுத்து ஆய்வு செய்கின்றனர்.

**கல்வெட்டின் அமைப்பு:**

இந்தக் கல்வெட்டுகள் உரைநடை வடிவிலும், பாடல் வடிவிலும் எழுதப் பெற்றிருக்கும், சில இடங்களில் உரைநடை பாடல் இரண்டு வடிவங்களிலும் எழுதப் பெற்றிருக்கும். பாடல் கல்வெட்டுகள் கூட யாப்பு இலக்கண முறையில் பாடல் வடிவில் இல்லாமல், உரைநடை போல் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும்.

**உரைநடை:**

கி.பி.926 ஆம் ஆண்டு. முதல் பராந்தக சோழனின் இருபத்தி இரண்டாம் ஆட்சியாண்டில் திருவிசலூர்ச் சிவபெருமானுக்கு, கிளிநல்லூர் உடையான் பாகன் சர்வதேவன் என்பவன் 96 ஆடுகள் கொடுத்து ஒரு நந்தா விளக்கு வைத்தான். இதை அக்கோயிலில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், திருப்புட்குழி விசயராகவப் பெருமாள் கோயில் முன் மண்டபத்துக் கிழக்குச் சுவரில் ஒரு பாடல் கல்வெட்டு உள்ளது என்றும் இந்தப் கல்வெட்டை வெட்டி வைத்தவன் சுந்தர பாண்டியனின் உயர் அலுவலரான அழகியான் பல்லவராயன் என்றும், கல்வெட்டுக் கூறுகிறது.

**கல்வெட்டின் பகுதிகள்**

பொதுவாக ஒரு முழுமையன கல்வெட்டு கீழ்காணும் பகுதிகளைக் கொண்டிருக்கும். அவை மங்களச் சொல், மெய்க்கீர்த்தி, அரசன் பெயர், ஆண்டுக்குறிப்பு, கொடை கொடுத்தவர், கொடைச் செய்தி, சாட்சி, காப்புச் சொல், எழுதியவர் முதலியன குறிப்பிடபட்டிருக்கும்.

**மங்கலச் சொல் - கிரந்தம்:**

கல்வெட்டின் தொடக்கத்தில் மங்களச் சொல் அமைந்திருக்கும். பெரும்பாலும் மங்களச் சொல் ஸ்வஸ்திஸ்ரீ என்று கிரந்த எழுத்துகளில் வடமொழிச் சொல்லாக எழுதப்பட்டிருக்கும். சுபமஸ்து, நமசிவாய, சித்தம் என்ற சொற்கள் அமைந்துள்ள கல்வெட்டுகளும் உண்டு.

**கல்வெட்டில் மொழிகள்:**

தமிழ்நாட்டில் பல மொழி பேசுகின்ற அரச மரபுகள் ஆட்சி செய்த காரணத்தால், தமிழைத் தவிர, தெலுங்கு, கன்னடம், வடமொழி, பாரசீகம், அரபு மொழிக் கல்வெட்டுகளும், கிழக்கிந்தியக் கம்பெனி வருகைக்குப்பின் சில ஆங்கிலச் கல்வெட்டுகளும் எழுதப்பட்டன.

**வட்டெழுத்து**

வட்டெழுத்து, கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் சிறிது சிறிதாகத் தமிழ்நாட்டில் வழக்கு இழந்துவிட்டது. முதலாம்இராசராசன் காலத்தில் (985 -1014) சில இடங்களில் வட்டெழுத்துக்கள் இன்றைய தமிழ் வடிவத்திற்கு மாற்றி எழுதப்பட்டன என்பதை குற்றாலம் கல்வெட்டு தெரிவிக்கிறது.

**தமிழ் எழுத்து**

இன்றைய தமிழ் எழுத்துக்கள் படிப்படியாகக் காலம் தோறும் வளர்ந்து வந்தன. மெய்யெழுத்துகள் புள்ளிபெறும் என்பது இலக்கண விதி, ஆனால் பெரும்பாலும் கல்வெட்டெழுத்துகள் புள்ளி வைத்து எழுதப்படவில்லை. உச்சரிப்பில் குறில், நெடில் வேறுபாடு உண்டு என்றாலும், கல்வெட்டுகளில் அவை ஒரே மாதிரியாகத்தான் எழுதப்பட்டிருக்கும் சில பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் புள்ளிகளும் உள்ளன.

**முதல் பராந்தகன்:**

ஆதித்த சோழன் பொ.ஆ.1907-ல் இறந்தவுடன் அவன் புதல்வனாகிய முதலாம் பராந்தகச் சோழன் தஞ்சை மாநகரில் சோழ இராஜ்ஜியத்திற்குச் சக்கரவர்த்தியாக முடிசூட்ட பெற்றான் இவ்வேந்தன் "பரகேசரி" என்ற பட்டமுடையவன் ஆவான். பொ.ஆ. 907-ல் இவன் சோழப் பேரரசின் ஆட்சியை ஏற்றுக்கொண்டகாலத்தில் வடக்கேயுள்ள திருக்காளத்தி வரையில் தொண்டைமண்டலம் இவன் ஆளுமைக்குட்பட்டிருந்தது. கொங்கு மண்டலமும் இவன் ஆளுமைக்குட்பட்டிருந்து என்றும் அங்குக் காணப்படும் இவன் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. இவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டு கல்வெட்டுகள் அம்மன்னனை "மதுரை கொண்ட கோப்பெருகேசரிவர்மன்" என்று கூறுவர். பொ.ஆ 910 ஆண்டில் இவன் பாண்டிய நாட்டையும் ஈழத்தையும் வென்ற செய்தி கலிங்கத்து பரணியிலும் இடம் பெற்றிருக்கிறது.

இதனை

"ஈழமுந்தமிழ்க் கூடலுஞ் சிதைக்
திகில் நடந்தோர் இசைப்பரந்ததும்"

- கலிங்கத்துப்பரணியால் அறியலாம்

பரந்தாக சோழனது ஆட்சியின் 46-ஆம் ஆண்டு கல்வெட்டுகள் சோழ நாட்டின் கண்டியூர், திருச்சோற்றுந்துறை ஆகிய ஊர்களில் காணப்படுகிறது. அவ்வாண்டிற்கு பிறகு இம்மன்னனின் கல்வெட்டுக்கள் எங்கும் கிடைக்கவில்லை. பரந்தாகன் சிறந்த சிவபக்திச் செல்வம் வாய்க்கப் பெற்றவனாதலின் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து அதனை உண்மையில் பொன்னம்பலமாக்கினார். இச்செய்தியை ஆணைமங்கல செப்பேட்டிலும் திருவலங்காடு செப்பேட்டிலும் காண முடிகிறது.

**கண்டராதித்தசோழன் பொ.ஆ.950-957**

கண்டராதித்தசோழன் பொ.ஆ.953-ல் முடிசூடப்பட்டு சோழப் பேரரசிற்குச் சக்கரவர்த்தியானான். இம்மன்னன் “இராசகேசரி” என்ற பட்டம் புனைந்து அரசாண்டான். இவன் கல்வெட்டுகக்கள் பாண்டிய நாட்டில் எங்கும் கிடைக்கவில்லை. கண்டராதித்தப்பேரேரி என்ற நீர்நிலை ஒன்று இருந்தது என்பதை தென்னாற்க்காடு மாவட்டம் உலகபுரத்திலுள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது. கண்டராதித்தனுக்கு முன் முடிச்சோழன் என்ற மற்றொரு பெயரும் வழங்கியுள்ளது. சிதம்பர தாலுக்காவிலுள்ள உடையாரர்குடியில் காணப்படும் கல்வெட்டொன்று இவனை மேற்கெழுந்தருளிய தேவர் என்று குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.

**கண்டராதித்தனுடைய மனைவி செம்பியன் மாதேவி**

சிவபக்தையான செம்பியன்மாதேவி கணவனைப் பிரிந்தும் உயிருடன் இருந்தார். அவ்வரசி சிவப்பெருமானுக்குப் பல்வகைத் தொண்டுகள் புரிவதிலேயே தன் வாழ்வுநாட்க்களைக் கழித்து வந்தார் என்பது பல ஊர்களில் காணப்படும் கல்வெட்டுக்களால் நன்கு புலனாகின்றது. சிவபெருமானுக்கு அவ்வம்மையார் தன் கணவன் பெயரால் கண்டராதித்தம்கற்றளி அமைத்து உள்ளதால் அதில் தன் கணவன் இறைவனை வழிபடுவதுபோல படிமம் வைத்திருப்பதையும் அறிய முடிகின்றது.

**சுந்தரச்சோழன் பொ.ஆ.957-973**

சோழ நாட்டின் இழந்த பகுதிகளை மீட்பதில் வெற்றி பெற்றவன். 957 -ல் பட்டத்துக்கு வந்த சுந்தரச்சோழன். பாண்டிய தலைகொண்ட கரிகாலச்சோழனை கொலை செய்த குற்றித்திற்காகச் சிலருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து விற்கும் பணியினை மன்னன் கட்டளைப்படி திருவீர நாராயண சதுர்வேத மங்கலச் சபை மேற்கொண்டதாக இராசகேசரி இரண்டாம் ஆண்டு உடையார்குடிக் கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் ஆதித்தன் ஒரு சதியின் மூலம் கொலை செய்யப்பட்டான் என்பது இந்தக் கல்வெட்டால் தெளிவாகிறது.

**முதலாம் இராசேந்திர சோழன் பொ.ஆ.1012-1044**

இராசராசன் காலத்தில் இளவரசனாகப் பட்டம் சூட்டப்பெற்றவன். இராசேந்திர சோழன் இவனது ஆட்சியில் தற்போதைய தமிழ்நாடு, ஆந்திர, கேரள மாநிலங்களையும் மைசூர் நாட்டின் ஒரு பகுதியையும் ஈழ நாட்டையும் உள்ளடக்கியதாக இருந்த சோழநாடு மேலும் விரிவடைந்தது. சேர நாட்டின் மீது படையெடுத்து அதன் அரசனான பாஸ்கரரவிவர்மனை அகற்றிவிட்டு, அந்நாட்டை சோழரின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான். ஈழ நாட்டின் மீதும் படையெடுத்து முழு நாட்டையும் கைப்பற்றியதுடன், தப்பி ஓடிய பாண்டியன் இலங்கையில் மறைந்து வைத்திருந்த பாண்டி நாட்டு மணிமுடியையும், செங்கோலையும் மீட்டு வந்தான்.

வடநாட்டை வென்று கங்கை நீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததன் நினைவாகக் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்றும் நகரை ஏற்படுத்தினான். இங்கு பெருவுடையார்க்கோவிலைப் போலவே கட்டப்பட்ட கோவில் சிற்பக்கலையின் பெருமித்ததை விளக்குகிறது. தனது வெற்றியின் நினைவாக இங்கு “சோழ கங்கை” என்ற பெரிய ஏரியினை வெட்டச் செய்தான் என்ற செப்பேடுகள் கூறுகின்றன.

**இரண்டாம் இராசேந்திரன்.**

முதலாம் இராசேந்திரனை தொடர்ந்து அவன் தம்பி இராசேந்திரன் என்னும் அரியணைப் பெயருடன் முடி சூட்டிக்கொண்டான். இவன் இரண்டாம் இராசேந்திரன் எனப்படுகின்றான். கொப்பத்துப் போரில் தன் அண்ணன் மாண்டதும் படை நடத்திப் பகைவர்களை வென்றான். இவனது மகள் மதுராந்தகி பிற்காலத்தே குலோத்துங்கன் என்றழைக்கப்பட்ட சாலுக்கிய இராசேந்திரனுக்கு மணம் முடித்து வைக்கப்பட்டாள். இவள் தஞ்சை பெரிய கோவிலில் இராசராசேச்சுவர நாடகம் நடத்த ஆண்டுக்கு 120 கலம் நெல் நிவந்தமாக அளித்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

**முதலாம் குலோத்துங்க சோழன் பொ.ஆ.1070-1120**

சங்கத்தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் என்று கல்வெட்டில் புகழ்பெற்ற இவ்வேந்தர் சோழ இராச்சியத்திற்குச் சக்கரவர்த்தியாக ஐம்பது ஆண்டுகள் வரையில் ஆட்சிபுரிந்தான். தமிழ்நாட்டிலும் இவன் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மைசூர் இராஜ்ஜியத்திலும், கொங்கு நாட்டிலும் இவன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவனது நீண்ட ஆட்சியில் வரையபெற்ற அக்கல்வெட்டுக்களில் பல மெய்க்கீர்த்திகள் உள்ளன.

**குலோத்துங்கள் தன நாட்டில் சுங்கம் தவிர்த்தமை**

குலோத்துங்கன் தனது ஆட்சிக்காலத்தில் நிகழ்த்திய அறிய செயல்களுள் தன் நாட்டில் சுங்கவரியை நீக்கியமையாகும். நாட்டு மக்களுக்கு நலம் புரியக் கருதி இவன் ஆற்றிய இவ்வருஞ்செயல் அக்காலத்தில் மக்கள் எல்லோரையும் மகிழ்வித்தமையால் அனைவரும் இம்மன்னனை வாயார வாழ்த்தி சுங்கம் தவிர்த்த சோழன் என்று வழங்குவராயினர். கவிச் சக்கரவத்தியாகிய ஓட்டக்கூத்தர்

"புவிராச ராசர் மனுமுதலோர் நாளில்
துவிராத சுங்கன் தவிர்த்தோன்"

என்று இரண்டாம் குலோத்துங்க சோழன் மூவர் உலாவில் கூறியிருந்ததால் அத்தகைய பழைய வரியை இவன் நீக்கிப் புகழ் எய்தினான் என்பதை அறியமுடிகிறது.

குலோத்துங்கன் தன் நாட்டில் சுங்கதவிர்த்து அரசாண்டமை அக்காலத்தில் பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தமையால் இவன் வழித் தோன்றல்கள் மூவரின் மீது உலாக்கள் பாடிய புலவர் பெருமானாகிய ஓட்டக்கூத்தர் இவ்வருஞ்செயலை உலா நூல்களில் மறவாமல் கூறிப் புகழ்ந்திருப்பதோடு தம் தக்கயாகப் பரணியிலும் குறிப்பிட்டுள்ளார்.

"கலமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
உலகை முன் காத்த உறைவோன்"

என்ற இராசராச சோழனுலாவிலும்

"அழிவந்த வேதத் தழிவு மாற்றி
யவனி திருமகட்காக மன்னர்
வழிவந்த சுங்கத் தவிர்த்த பிரான்
மகன் மகன் மைந்தனை வாழ்த்தினவே"

என்ற தக்கயாகப்பரணிப் பாடல்களும் வெளியிடப்படுத்துகின்றன.

**முடிவுரை**

இவ்வாறாக சோழர் காலத்தை பற்றி அறிந்து கொள்வதற்கு பராந்தக சோழனின் வேளச்சேரி செப்பேடுகளும் கி. பி. 1014ல் இறைவன் இராஜராஜனை தம்மோடு சேர்த்துக்கொண்டார் என்பதை அவருடைய புகழ் பாடும் தேவார திருமுறைகளும், கல்வெட்டுகளும் இராஜேந்திர சோழன் பற்றிய திருவாலங்காடு செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுகளும் முதலாம் குலோத்துங்கனின் சிறிய லெய்டன் செப்பேடுகளும் சோழர் காலத்தைப் பற்றி தெளிவான விளக்கங்கள் தருகிறது என்று கூறினால் மிகையாகாது.

**மேற்கோள்கள்:**

1. .EPI.INDICA VOL.XXII, No.34
2. .EPI.INIDCA VOL.XXV, (1939-1940)
3. MEMOIRS OF THE A.Sl.No.79.
4. S.I.I, VOL.III, 12
5. S.I.I, IV No. 12
6. A.R.E,1903-04
7. S.I.I VOLIII,PART,PCXXI

8. நீலகண்டசாஸ்திரி கே.ஏ.என், **சோழர் கால வரலாறு**, விஜயா பதிப்பகம், சென்னை, 1986.
9. குடவாயில் பாலசுப்பிரமணியம், **சோழ மண்டலத்து நாயகர்கள்**, **சிற்பங்களும், ஓவியங்களும்,** சென்னை, 1987.
10. சுப்பிரமணியன்.ஆர்.ஜெ, **சோழப் பேரரசு,** சாந்தி பதிப்பகம், சென்னை, 1998.
11. பொன்னம்மாள்.ஆர் **இராஜராஜ சோழன் வரலாறு,** வானதி பதிப்பகம், சென்னை, 1997 ப.எண்.12.
12. டாக்டர். லிங்கேஸ்வரன்.என். **தமிழக வரலாறு,** இராமநாதன் பதிப்பகம், சென்னை, 2003.
13. முனைவர், நளினி. மு. **மகேந்திரக் குடைவரைகள்,** அலமு பதிப்பகம், சென்னை, 2004.
14. டாக்டர். ராசமாணிக்கணார்.மு்ா, **சோழர் கால வரலாறு,** காளீஸ்வரி பதிப்பகம், தியாகராயர் நகர், 2010.
15. சதாசிவ பாண்டாத்தா,தி.வை, **தமிழ்க் கல்வெட்டுகள்,** பாலாஜி பதிப்பகம், நாகர்கோயில், 2012.
16. முனைவர். தங்கவேலு, **தமிழ்ச்சமூக வரலாறு,** அமிழ்தம் பதிப்பகம், சென்னை, 2013.
17. நீலகண்டசாஸ்திரி. கே.ஏ. **சோழர்கள்** புத்தகம் 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1989.
18. முனைவர் நடேசன். த, **கல்வெட்டுகள் கூறும் உண்மைகள்**, விருத்தம்மள் பதிப்பகம், சிதம்பரம், 2005.
19. அப்பாத்துரையார். கா, **தமிழக வரலாறு,** காளீஸ்வரி பதிப்பகம், சென்னை, 2013.
20. நடன காசிநாதன், **சோழர் செப்பேடுகள்,** சேகர் பதிப்பகம், சென்னை, 2011.
21. சுந்தரேசவாண்டையார், **கல்வெட்டுகள்,** பழனியப்பா வெளியிடு, சென்னை, 1958.
22. டாக்டர்.சுவாமிநாதன்.அ, **தமிழ்நாட்டு தேசிய பண்பாட்டு வரலாறு,** தீபா பதிப்பகம், பெருங்குடி, 2004.
23. முனைவர் நாகசாமி. இரா, **கல்வெட்டியல்,** தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2010.